**CC.No. 119/2009** தேதி: **09.09.2025**

அசா 2 திரு. இசுமாயில் த/பெ நயினா முகமது மனுவில் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நாங்கள் கிரயம் பெற்ற இடத்தின் சர்வே நம்பர் என்னவென்றால் ஞாபகமில்லை. அது தஞ்சாவூர் டவுனில் உள்ளது. அது புதுப்பட்டினம் வட்டத்தை சேர்ந்தது. அது புதுப்பட்டினம் வட்டம் 2 பிரிவாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அது புதுப்பட்டினம் கிராமம் மற்றும் புதுப்பட்டினம் டவுன் என்று 2 பிரிக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. தஞ்சாவூர் டவுனில் 31 பள்ளிவாசல் என்கிற ஆத்தங்கரை பள்ளிவாசல் என்று உள்ளது. அது பெரிய பள்ளிவாசல் என்றும் அழைக்கப்படுகிறது. நாங்கள் கிரயம் வாங்கியுள்ள இடம் தஞ்சாவூர் டவுனில் உள்ளது என்றால் சரிதான். அதன் புல எண் 31 .மேலே கூறியுள்ள பள்ளிவாசல் நகர எல்லைகுள்ள புல எண் 31 என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் கிரயம் வாங்கியுள்ள இடம் தஞ்சாவூர் புதுப்பட்டினம் கிராமம் எல்லைக்குள் உள்ள புல எண் 31 ல் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த இடம் ராமசாமி தோட்டம் என்று எனக்கு தெரியும் ராயப்பா தோட்டமா என்று எனக்கு தெரியாது. அந்த இடத்தில் சந்தாஉசேன் தர்கா உள்ளது . அதனுடைய சர்வே எண் எனக்கு தெரியாது. சந்தாஉசேன் தர்காவிற்கு சொந்தமான இடத்தை கிரயம் வாங்கவில்லை. நானும் எனது மருமகன் முகமது பாருக் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறோம். அந்த தர்காவிற்கு சொந்தமான 1ஏக்கர் 70 சென்ட் இடத்தை ஏலத்திற்கு எடுத்துள்ளேன்.

2. அந்த இடத்தின் புலஎண் 33 என்றால் ஞாபகமில்லை. அந்த இடத்தில் புலஎண் 32 உள்ளதா என்றால் ஞாபகமில்லை. நாங்கள் புல எண் 31 என்றால் ஞாபகமில்லை அதனை செட்டியார் வகையாரிடம் வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. இந்த புல எண் 31,32,33 மூன்றும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த மூன்றும் இடங்களும் சந்தா உசேன் தர்காவிற்கு சொந்தமானது என்றால் இல்லை. நாங்கள் செட்டியார் வகையாரிடம் இருந்து தான் இடத்தை வாங்கியுள்ளோம். அந்த கிரயம் சம்மந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமோ என்றால் இல்லை. செட்டியார் வகையாரிடம் இருந்து அவர்களுக்கு சொந்தமான இடத்தை விற்பதற்கு பவர் வாங்கியுள்ளேன். அந்த இடத்தின் எல்லை நகர எல்லைக்குள் வரும் என்றால் ஞாபகமில்லை. அசாஆ 5 ஆவணம் மாவட்ட ஆட்சியருக்காக மு. இஸ்மாயில் என்பவரால் 22.05.2004 ம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது போன்று எந்த ஒரு ஆவணம் இல்லை அது போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது. நான் எதன் அடிப்படையில் அவ்வாறு சொல்கிறேன் என்றால் நான் அந்த ஆவணத்தை மாவட்ட ஆட்சியரிடம் எடுத்து சென்று காண்பித்தேன். அவர் அதனை போலியானது என்று சொன்னார். அதன் பேரில் தான் புகார் கொடுக்கப்பட்டது. அந்த மாவட்ட ஆட்சியர் பெயர் எனக்கு தற்போது ஞாபகமில்லை. எந்த ஆண்டு நான் அதனை மாவட்ட ஆட்சியரிடம் கொண்டு சென்றேன் என்றால்

ஞாபகமில்லை. நான் அவ்வாறு மாவட்ட ஆட்சியர் அலுவகலத்திற்கு செல்லவில்லை என்றாலும், எந்த ஒரு ஆவணத்தையும் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

3.அந்த ஆவணத்திற்கு சான்றளித்த அதிகாரியின் பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த அதிகாரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேலை செய்தாரா என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வக்பு சம்மந்தப்பட்ட சொத்துகளை வாங்கி நான் மோசடி செய்தேன் என்றால் சரியல்ல. பிற்படுத்தபட்டோர் நல துறை சம்மந்தப்பட்ட அதிகாரி தான் அந்த சான்றை வழங்கினார் என்றாலும் அதனை கொண்டு தான் எதிரிகள் கோரிக்கை செய்கிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துகளை மோசடி செய்வதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தஞ்சாவூரில் டவுனில் காட்டப்படும் புல எண்ணில் உள்ள இடங்களும் புதுப்பட்டினம் கிராமம் புல எண்ணில் காட்டப்படும் இடங்களும் வெவ்வேறானது என்றால் எனக்கு தெரியாது. நான் தஞ்சாவூரில் புதுப்பட்டினம் டவுனில் காட்டப்படும் புல எண் 31 ல் உள்ள இடங்களை வாங்கி கொண்டு புதுப்பட்டினம் கிராமத்தில் உள்ள புல எண்ணை மோசடியாக கோரிக்கை செய்கிறோம் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம்: S.T. கனிமொழி., L.L.M.,

நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.